# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 51/2014

சாட்சி : PW– 1
பெயர் : திருமதி. சாந்தி தேதி : 17.11.2025

(சாட்சி மனுவின் மீது திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு கூடுதலாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அவர் சாட்சியாகவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் முதல் பக்கத்தில் தேதி கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பக்கம் 5லும் தேதி, மாதம், வருடம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கான முத்திரை தாள்கள் 17.07.2013 அன்று வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் பத்தி 8ல் குறிப்பிட்டுள்ளவாறு 1ம் பிரதிவாதி மீது இந்த ஆவணத்தை குறிப்பிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. இதற்கு முன்பாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்துள்ளோம். எங்களுக்கும், ஜாகிர் உசேனுக்கும் இடையே மனக்கசப்பு ஏதும் இல்லை. பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் பத்தி 5ல் எங்களுக்கும், ஜாகீர் உசேன் மற்றும் ராமசாமிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் சரிதான். பி.வா.சா.ஆ–3 ஆவணத்தின் அடிப்படைக்கு 1ம் பிரதிவாதி எங்களுக்கு செலுத்தவேண்டிய தொகைகளை செலுத்தி முடித்துவிட்டார் என்றும், அதனால்தான் பி.வா.சா.ஆ–5 பத்தி 8ல் சொல்லியுள்ளவாறு 1ம் பிரதிவாதி மீது பின்னிட்டு நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ராமசாமியின் மீது

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் செய்தோம். ராமசாமியின் மீது எவ்விதமான காசோலை மோசடி வழக்குகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேலம் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்துள்ளோம் வழக்கு எண்கள் நினைவில் இல்லை. ராமசாமி இறந்துவிட்ட காரணத்தினால் வழக்குகள் முடிக்கப்பட்டுவிட்டது. பி.வா.சா.ஆ–5 ஆவணம் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 மற்றும் பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் இரண்டாம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள கோபால் ஒரே நபர்தான். மேற்படி சாட்சி கோபாலை வைத்துதான் பி.வா.சா.ஆ–5 ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் மூலமாக ஜாகிர் உசேனுக்கும், ராமசாமிக்கும் தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் 5 மாத காலத்திற்குள் கிரயம் செய்துகொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும், 5 மாதகாலத்திற்குள் நாங்கள் கிரயம் செய்துகொள்ள தவறினால் அட்வான்ஸ் தொகையை இழந்துவிட வேண்டியது என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 5 மாதகாலத்திற்குள் நாங்கள் கிரயம் செய்துகொள்ள முன்வராத காரணத்தினால் ஏற்றுதை ஆற்றுக பரிகாரம் கோரியும், அட்வான்ஸ் தொகையை திருப்பி தரகோரியும் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. நாங்கள் மேற்படி 5 மாதகாலத்திற்குள் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் நேரடியாக கேட்டுக்கொண்டு இருந்தோம். பி.வா.சா.ஆ–1 புகாருக்கு பிறகு அந்த விசாரணையின் அடிப்படையில் என்ன நடைபெற்றது என்பதை பொறுத்தும், பி.வா.சா.ஆ–2 முதல் பி.வா.சா.ஆ–4 வரையிலான ஆவணங்களை பொறுத்தும் இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 முதல் பி.வா.சா.ஆ–4 ஆவணங்களை பொறுத்து வழக்கில் தெரிவித்தால் அது எங்களுக்கு பாதகமாக முடிந்துவிடும் என்ற காரணத்தினால்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

அதை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் பணம் வரவு செலவு சம்மந்தமாக முக்கிய நபர்கள் மூலமாக பேசி பிரச்சனையை தீர்த்துகொண்டதாக குறிப்பிட்டிருந்தபோதிலும் அதனை பொறுத்தும், எனது புகார் முடிக்கப்பட்டதை பொறுத்தும் நாங்கள் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 08.08.2012 தேதியிட்ட கிரய ஒப்பந்த ரத்து பத்திரத்தை அனுசரித்துதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் என்னிடம் காட்டப்படுவது தான். அது பி.வா.சா.ஆ.7 ஆகும். எங்களுக்கு சேரவேண்டிய பணம் முழுவதும் செல்லாகிவிட்டது என்ற காரணத்தினால் தான் பி.வா.சா.ஆ.7 ஆவணம் 1ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து 3ம் வாதியுடையது என்றால் அது எனக்கு தெரியாது. எனது வக்காலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது ஆகும். 1ம் பிரதிவாதி எனக்கு செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் செலுத்திவிட்டார் என்றும், எனவே இவ்வழக்கில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem